செய்வன்ன 65                    +++O+++                    நாள்: 25/01/17

**ஆணை:**

பார்வையில் 1-ல் காணும் அரசாணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் பிரசித்தி பெற்ற "அருள்மிகு நாகராஜா திருக்கோவில் தேரோட்ட திருவிழாவினை" முன்னிட்டு 09.02.2017 (வியாழன்) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(2)** 09.02.2017 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2017 மார்ச் திங்கள் இரண்டாவது சனிக்கிழமை (11.03.2017) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)** 09.02.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஒம்)/- பொ.ராஜேந்திரன்,
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).
கன்னியாகுமரி மாவட்டம்.

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்